# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

## விளைபயன்

## வரவு செலவு திட்டம்

## 2021 - 2022





# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

## 2021–2022ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

## வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

கடல் மட்டத்தை விட 78 மீட்டர் உயரத்திலும், 10.790 வடக்கு அட்சய ரேகையிலும், 78.705 தீர்க்க ரேகையிலும், செழுமையான, வற்றாத காவேரி ஆற்றின் கரையிலும், தமிழகத்தின் மையத்திலும் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 167.23 சதுர கிலோமீட்டர் பரப்பளவினை கொண்டுள்ளது. இந்நகரமானது சங்க காலம் தொடங்கி, பல மன்னர்களது ஆட்சியிலிருந்து, மென்மேலும் வளமாக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவில் பல உன்னத தலைவர்களையும், தேசியவாதிகளையும் வழங்கி தன்னிகரற்ற நகரமாகவும் விளங்குகிறது.

இந்நகரம் தமிழ்நாட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ள காரணத்தால், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கும் நகரமாகவும், அதன் காரணமாக போக்குவரத்து நிறைந்த மாநகரமாகவும் உள்ளது. தற்பொழுது திருச்சி விமானநிலையம் மத்திய அரசால் விரிவாக்கப்பட்டு பன்னாட்டு விமான நிலையமாக மாறியுள்ளதால் வான்வழி போக்குவரத்தும் நிறைந்து காணப்படுகிறது.

மேலும் மாநகரில் அதிக அளவில் மனைப்பிரிவுகள் உருவாகி வருவதாலும், மக்கள் தொகை பெருகி வருவதாலும், பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படை தேவைகளையும் மற்றும் பல்வேறு பணிகளுக்காக நகருக்கு வந்து செல்லும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படை தேவைகளையும், பூர்த்தி செய்ய வேண்டியதை கருத்தில் கொண்டு 2021–2022ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மாநகராட்சியின் மொத்த பரப்பளவு | 167.23 சதுர கிலோ மீட்டர் |
| 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி | 9.16 லட்சம் |
| கோட்டங்கள் | 4 |
| வார்டுகள் | 65 |

## 2020-2021ம் ஆண்டின் செயல்திறன் அறிக்கை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் 2020–2021ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட போது இருந்த நிதி நிலை குறித்தும், தற்பொழுது 2021–2022ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடுகள் குறித்தும், மேற்கண்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் குறித்த விபரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 2020–2021 திட்ட மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| வருவாய் / குடிநீர் மற்றும் மூலதன நிதி | 2020–2021 திட்ட மதிப்பீடு | 2020–2021 திருத்திய மதிப்பீடு |
|---|---|---|
| வரவு | 133547.05 | 87565.04 |
| செலவு | 133504.40 | 87528.60 |
| உபரி | **42.65** | **36.44** |

### கல்வி நிதி

(ரூபாய் இலட்சத்தில்)

| கல்வி நிதி | 2020–2021 திட்ட மதிப்பீடு | 2020–2021 திருத்திய மதிப்பீடு |
|---|---|---|
| வரவு | 1451.00 | 1161.00 |
| செலவு | 1426.50 | 856.50 |
| உபரி | **24.50** | **416.50** |

2020–2021ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கு தேவையான நிதி, வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2020–2021ம் ஆண்டில் கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக, அரசு அறிவிப்பின்படி பொது ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தால், மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டவல்ல காந்தி சந்தை, மத்திய பேருந்து நிலைய வாகன நிறுத்துமிடங்கள், கட்டண கழிவறைகள், பேருந்து நுழைவு கட்டணங்கள், பிற குத்தகை இனங்கள், வணிகவளாகங்கள் மற்றும் இதரக் கடைகள் மூலம் ஈட்டப்படும் வருவாய் குறைந்தமையாலும், சொத்துவரி பொது சீராய்வு மூலம் உயர்த்தப்பட்ட சொத்துவரி நிறுத்தி வைக்கப்பட்டமையால், பழைய சொத்துவரி கேட்பே மீண்டும் அமல்படுத்தப்பட்டதாலும் மற்றும் பொதுமக்கள் செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், புதைவடிகால் கட்டணம், கட்டிட உரிமக் கட்டணங்கள் மற்றும் இதர இனங்களில் வரவு பெருமளவு காரணமாக குறைந்தது. இதனால் 2020–2021ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்ட வருவாய் ஈட்டப்படாததால், அதற்கேற்ப வருவாய் நிதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட பணிகளுக்கான செலவும் குறைக்கப்பட்டது.

இம்மாநகராட்சியில் 2020–2021ம் ஆண்டில் கீழ்க்காணும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| வ.எண் | வேலையின் பெயர் | மொத்தம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | சிமெண்ட் சாலைகள் | |
| 1 | சிமெண்ட் கான்கீரிட் தளம் மேம்படுத்தும் பணி | 210.64 |
| 2 | மண்சாலைகளை சிமெண்ட் கான்கீரிட் தளமாக மாற்றுதல் | 374.33 |
| 3 | கருங்கல்தளத்தினை சிமெண்ட் கான்கீரிட் தளமாக மாற்றுதல் | 14.55 |
| | தார்ச்சாலைகள் | |
| 4 | மண்சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றுதல் | 54.20 |
| 5 | பேவர் இயந்திரம் மூலம் தார்த்தளம் மேம்படுத்தும் பணி | 3709.35 |
| 6 | பழுதடைந்த தார்ச்சாலை பேட்ச் ஒர்க் மூலம் சீரமைத்தல் | 116.01 |
| | இதர சாலைகள் | |
| 7 | பேவர் ப்ளாக் அமைத்தல் | 14.60 |
| | மழைநீர் வடிகால் | |
| 8 | மழைநீர் வடிகால் அமைத்தல் | 97.73 |
| 9 | மழைநீர் வடிகால் மராமத்து பணிகள் | 482.76 |
| 10 | நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 31.11 |
| 11 | வாய்க்கால் மற்றும் பிரதான மழைநீர் வடிகால்கள் தூர்வாரும் பணி | 90.08 |
| 12 | சிறுபாலங்கள் கட்டுதல் | 26.89 |
| | கட்டிடங்கள் | |
| 13 | அலுவலக கட்டிடம் பராமரிப்பு பணிகள் | 256.86 |
| 14 | மாநகராட்சி குடியிருப்புகள் பராமரிப்பு பணி | 59.89 |
| 15 | பள்ளி கட்டிடங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | 1647.19 |
| 16 | நவீன கழிப்பிடங்கள் மராமத்து செய்தல் | 159.29 |
| 17 | தாங்கு சுவர் கட்டும் பணி | 15.68 |
| 18 | எரிவாயு தகன மேடை அபிவிருத்திப் பணிகள் | 33.33 |
| 19 | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள் மேம்படுத்துதல் மற்றும் சத்துணவு மையங்கள் மேம்படுத்துதல் | 66.56 |
| 20 | தேசிய நகர்புற சுகாதாரத்திட்டம் மற்றும் மகப்பேறு மருத்துவமனை அபிவிருத்திப் பணிகள் | 198.45 |
| 21 | சுடுகாடு பராமரிப்பு பணிகள் | 49.31 |
| 22 | பேருந்து நிழற்குடை அமைக்கும் பணிகள் | 11.99 |
| 23 | சமுதாய கூடம் கட்டும் பணிகள் | 56.96 |
| 24 | உடற்பயிற்சி கூடம் / திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணிகள் | 174.72 |
| 25 | சந்தை / இறைச்சி கூடம் / மீன்சந்தை அமைக்கும் பணிகள் | 127.67 |
| 26 | பொது விநியோக கடைகள் கட்டும் பணிகள் | 85.53 |
| 27 | மீத்தேன் எரிவாயு முறையில் சமையலறை அமைத்தல் (Bio Digester) | 7.43 |
| 28 | உள் விளையாட்டு அரங்கம் / திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் | 34.78 |
| | பேருந்து நிலைய பணிகள் | |
| 29 | மத்திய பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள் | 23.04 |
| | பூங்காக்கள் | |
| 30 | பூங்கா அபிவிருத்திப் பணிகள் | 521.04 |
| | தெருவிளக்குகள் | |
| 31 | தெருவிளக்கு அமைத்தல் மற்றும் பராமரித்தல் including PPP பணிகள் | 92.56 |
| | குடிநீர் மற்றும் வடிகால் பணிகள் | |
| 32 | தலைமை நீர்ப்பணி நிலைய அபிவிருத்திப் பணிகள் | 445.72 |
| 33 | குடிநீர் விநியோகம் மற்றும் குழாய்கள் அமைத்தல் | 665.80 |

| வ.எண் | வேலையின் பெயர் | மொத்தம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 34 | மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 22.02 |
| 35 | குடிநீர் இதர பணிகள் | 301.39 |
| 36 | லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | 22.55 |
| 37 | அடிகுழாய் அமைத்தல் | 10.47 |
| 38 | புதைவடிகால் உந்து நிலைய பராமரிப்பு, புதைவடிகால் சேகரக் குழாய் பதித்தல் மற்றும் பராமரிப்பு | 241.28 |
| 39 | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணிகள் | 10.30 |
| 40 | புதைவடிகால் திட்டம் | 12174.01 |
| | திடக்கழிவு மேலாண்மை பணிகள் | |
| 41 | குப்பை கிடங்கு மேம்படுத்துதல் | 9.86 |
| 42 | திடக்கழிவு மேலாண்மை அபிவிருத்தி பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் / வாகனங்கள் வாங்குதல் | 25.71 |
| 43 | நுண் உரம் செயலாக்க மையம் | 217.00 |
| 44 | ஒப்பந்த முறையில் ஓட்டுநர்கள் பணியமர்த்தல் | 246.40 |
| 45 | வாகன பராமரிப்பு | 354.17 |
| 46 | திடக்கழிவு மேலாண்மை – இதரப் பணிகள் | 48.92 |
| | இதரப் பணிகள் | |
| 47 | மின்னணு ஆளுமை | 15.52 |
| 48 | தெருக்களில் பெயர் பலகை அமைத்தல் | 9.84 |
| 49 | குளங்களில் தூர் வாரும் பணி | 24.14 |
| 50 | தூய்மை இந்தியாத் திட்டம் | 18.93 |
| 51 | மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் கட்டும் பணி | 82.27 |
| 52 | சாலை மையத் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணி | 47.21 |
| 53 | பிறப் பணிகள் | 404.82 |
| 54 | விளம்பரப் பணிகள் | 20.75 |
| 55 | கலந்தறிதர்குரியர் கட்டணம் | 19.18 |
| 56 | சுகாதாரத்திற்கான பைரத்ரம் திரவம் வாங்கியது | 66.38 |
| 57 | சீர்மிகு நகரத் திட்டப் பணிகள் | 14348.18 |
| 58 | பரப்புரையாளர்கள் | 46.46 |
| 59 | காவலர்கள் | 31.13 |
| 60 | வர்ணம் பூசும் பணி | 1.25 |
| 61 | மரம் நடுதல் / மியான்வாகி காடுகள் | 57.20 |
| 62 | கோவிட் –19 தொடர்பான பணிகள் | 748.44 |
| 63 | அம்மா உணவகங்கள் | 20.77 |
| 64 | திருவிழாக்கள் | 11.70 |
| | மொத்தம் | **39614.30** |

மேற்கண்ட பணிகளுக்கான நிதி ஆதாரம், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் மான்யம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி, மாநகராட்சியால் பெறப்பட்ட கடன் மற்றும் மாநகராட்சி பொது நிதி ஆகியவைகளிலிருந்து பெறப்பட்டு மாநகராட்சி வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

2020–2021ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும் பொழுது உபரி ரூபாய் 42.65 இலட்சமாக கணக்கிடப்பட்டது. தற்பொழுது 2020–2021ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் உபரி ரூ.36.44 இலட்சமாக கணக்கிடப்பட்டுள்ளது.

## 2020–21ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

### 1. 14வது நிதிக்குழு பரிந்துரை திட்டம்

இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.7184/2020/LA3-1 நாள்.24.03.2020-ல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி முதல் தவணையாக பெறப்பட்ட அரசு மான்யம் ரூ.2471.62 இலட்சம் மற்றும் மாநகராட்சி பொது நிதி ரூ.13.38 இலட்சத்துடன் சேர்த்து மொத்தம் ரூ.2485.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சிப் பகுதிகளில் கீழ்கண்டவாறு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | பணிகள் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சாலை அமைத்தல் / மேம்படுத்துதல் - *38.97*கி.மீ. | 34 | 2485.00 |

தற்பொழுது 28 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 6 பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது தவணையாக பெறப்பட்ட ரூ.2471.62 இலட்சம் அரசு மான்யம் மின் கட்டணம், திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் அரசு வழிகாட்டுதலில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டது. இதுவரை இப்பணிகளுக்காக ரூ.2089.19 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2. மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் (வார்டு எண். 61 முதல் 65 வரை) குடிநீர் அபிவிருத்தி திட்டம் KFW ஜெர்மானிய வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்துதல்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான வார்டு எண்.61 முதல் 65 முடிய உள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு, நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்குவதற்கு ரூபாய் 6370.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்: 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.08.2015ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் *3* தொகுப்புகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்பொழுது 2 & *3* தொகுப்புகள் முடிக்கப்பட்டு, 1வது தொகுப்புக்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இது வரை இத்திட்டத்திற்கு ரூ.4814.48 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் புதியதாக 9000 எண்ணிக்கை குடிநீர் இணைப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதன் மூலம் உத்தேசமாக ரூ.540.00 இலட்சம் குடிநீர் முன் இணைப்பு தொகை வசூலிக்க நடவடிக்கை துவக்கப்பட்டுள்ளது. மற்றும் 9000 குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும் நிலையில், மாநகராட்சிக்கு ஆண்டொன்றிற்கு ரூ.1728.00 இலட்சம் குடிநீர் கட்டணமாக வசூல் செய்யப்படும்.

**3. உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2015-16 (Infra Gap Filling Fund 2015-2016) :-**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.6க்குட்பட்ட திருவளர்ச்சோலை மற்றும் பொன்னுரங்கபுரம் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க, காவேரி ஆற்றுப்படுகையில் ஆழ்துளை கிணறு அமைத்து, 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு, அரசு மான்யம் ரூபாய் 50.00 இலட்சத்துடன், மாநகராட்சி பொது நிதி ரூபாய் 10.00 இலட்சத்தையும் சேர்த்து, மொத்தம் ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கிய பணி, நீதிமன்ற தடை காரணமாக காலதாமதமானதால், கூடுதலாக ரூ.41.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

**4. பொது/தனியார் பங்களிப்பு (PPP முறையில்) மற்றும் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் மின்சக்தி சேமிப்பு திறனுடன் தெருவிளக்குகளை பராமரிக்கும் பணி**

ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தி திட்டம் ( IUDM)/ மாநகராட்சி பொது நிதி மற்றும் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் பொது தனியார் பங்களிப்பு PPP (Public Private Partnership) முறையில், மின் ஆற்றல் தணிக்கை செய்தல், புதிதாக தெருவிளக்குகள் மற்றும் மின் சக்தி சேமிப்பு உபகரணங்களை பொருத்தி, இயக்கி பராமரிக்கும் பணிகளை பத்தாண்டுகள் மேற்கொள்ள தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கீழ்கண்ட விபரப்படி தற்போது, இம்மாநகராட்சியில் தெருவிளக்குகள் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| 20 W எல்.இ. டி மின் விளக்குகள் | 30736 |
| 40 W எல்.இ. டி மின் விளக்குகள் | 204 |
| 70 W எல்.இ. டி மின் விளக்குகள் | 21 |
| 90 W எல்.இ. டி மின் விளக்குகள் | 6408 |
| 120 W எல்.இ. டி மின் விளக்குகள் | 3189 |
| 200 எல்.இ. டி மின் விளக்குகள் | 442 |
| மொத்தம் | **41000** |

இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, மூன்றாமாண்டில் 76,08,040.52 யூனிட் மின்சாரம் சேமிக்கப்பட்டுள்ளது. இது மொத்த மின் பயன்பாட்டில் 56.77 சதவீதம் சேமிப்பு ஏற்பட்டு, மாநகராட்சிக்கு ரூ.483.11 இலட்சம் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.



Karur By-Pass ROB Ward No - 09

## 5. தேசிய நகர்புற சுகாதாரத்திட்டம் (NUHM)

இத்திட்டத்தின் கீழ் உறையூர் மற்றும் கீழரண் சாலை ஆகிய இடங்களில் மருத்துவமனை கட்டிடங்கள் புதிதாக கட்டவும் மற்றும் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.300.00 இலட்சம் மான்ய தொகையுடன், மாநகராட்சி பொது நிதி ரூ.20.50 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.320.50 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற் கொள் ளப்பட்டு வருகின் றது.

| வ. எண் | பணி | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | கீழரண் சாலையில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டும் பணி | 99.50 | பணி நடைபெற்று வருகிறது. |
| 2 | கீழரண் சாலை மருத்துவமனையில் மின்சாரம், தண்ணீர் மற்றும் இதர வசதிகள் செய்து தரும் பணி | 20.50 | வ.எண் 1 ல் கண்ட பணி முடிவுற்றவுடன் மேற்கொள்ளப்பட உள்ளது. |
| 3 | கீழரண் சாலை மருத்துவமனையில் கூடுதல் அபிவிருத்திகள் செய்து தரும் பணி | 28.00 | பணி நடைபெற்று வருகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 4 | உறையூர் மருத்துவமனை வளாகத்தில் புதிதாக மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணி | 75.00 | பணி முடிவுற்றது. |
| 5 | உறையூர் மருத்துவமனை வளாகத்தில் கூடுதல் மருத்துவமனை கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி | 97.50 | பணி நடைபெற்று வருகிறது. |
| | மொத்தம் | **320.50** | |

இப்பணிகளுக்கென, இதுவரை ரூ.105.00 இலட்சம் அரசு மான்யம் பெறப்பட்டு, ரூ.180.00 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## 6. உறையூர் காசிவிளங்கி பகுதியில் நவீன மீன் சந்தை அமைத்தல்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிசேகபுரம் கோட்டம், வார்டு எண். 60, காசிவிளங்கி பகுதியில் ரூ.332.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன மீன்சந்தை அமைப்பதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.3230/2015/E3 நாள் : 22.02.2016ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கு மத்திய அரசின் தேசிய மீன்வளர்ச்சி வாரியம், ஹைதராபாத் மூலம் ரூ.100.00 இலட்சம் அரசு மான்யமாகவும், ரூ.232.00 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதி பங்குத்தொகையாக மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது. தற்பொழுது அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இது வரை இப்பணிக்காக ரூ.283.42 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.





## 7. புதைவடிகால் திட்டம் – பகுதி II (Phase- II )

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டத்தினை அம்ரூத் பகுதி II (Phase- II ) திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும், ஏற்கனவே பஞ்சப்பூரில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தி, பயன்படுத்தும் வகையிலும், 2020-ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ரூ.344.00 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசு ஆணை எண். 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC.2) நாள்.25.10.2017ல் நிர்வாக அனுமதி ஒப்புதல் அளித்துள்ளதின் பேரில், மேற்படி திட்டப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேலும், உள்ளாட்சிகளின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு, அரசு ஆணை (ப) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC.2) நாள்.28.02.2019-ல் திட்ட மதிப்பீடு ரூ.377.29 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நிதி ஆதாரம் பின்வருமாறு (ரூ.கோடியில்)

| திட்டத்தின் பெயர்/ திட்ட எண் | மதிப்பீட்டுத் தொகை | திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | இந்திய அரசு மான்யம் | தமிழக அரசு மான்யம் | உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு | | |
| | | | | மாநக–ராட்சி நிதி | ஆசிய வங்கி நிதி | |
| | | | | | மான்யம் | கடன் |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் (பகுதி II) | 377.29 | 172.00 | 68.80 | 43.11 | 55.54 | 37.84 |

இத்திட்டத்தில் வார்டு எண். 7, 8, 9, 12, 14, 15, 21, 27, 31, 46, 52, 53, 54, 57, 58, 59, 60, 63, 64, 65 (பகுதி மட்டும்) 28,29,30,61,62 (முழுவதும்) ஆகிய 25 வார்டுகளுக்கு புதைவடிகால் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கிய அம்சங்கள் : -

| | | |
|---|---|---|
| 1 | கழிவுநீர் சேகரக் குழாயின் நீளம் | 312.217 கி.மீ |
| 2 | பிரதான கழிவுநீர் உந்துக் குழாய் நீளம் | 23.895 கி.மீ |
| 3 | பம்பிங் ஸ்டேஷன் | 5 எண்ணிக்கை |
| 4 | லிப்டிங் ஸ்டேஷன் | 24 எண்ணிக்கை |
| 5 | வழங்கப்படும் வீட்டிணைப்புகளின் எண்ணிக்கை | 44569 |
| 6 | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் | |
| a | கீழ்கல் கண்டார்கோட்டை (37 MLD) | 1 எண்ணிக்கை |
| b | பஞ்சப்பூர் (30 MLD - பழையது) | 1 எண்ணிக்கை புணரமைத்தல |

இத்திட்டத்தின் 3 தொகுப்புகளுக்கான (பகுதி II திட்டம்) பணிகளும் நடைபெற்று வருகிறது. இதுவரை இப்பணிகளுக்காக ரூ.14941.00 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 8. புதைவடிகால் திட்டம் – பகுதி III (Phase- III )

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்.31, 35, 36, 38, 42, 43, 45, 52, 53, 60, 63 (11 Nos) (பகுதி மட்டும்) 37, 39, 40, 41 ( 4 Nos ) (முழுவதும்) ஆகிய 16 வார்டு பகுதிகளுக்கு புதைவடிகால் அமைப்பதற்கு 2017-2020ம் வருடத்தின் அம்ரூத் (AMRUT) திட்டத்தின் கீழ், 2020 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, ரூ.312.14 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசு ஆணை எண். 5 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.2) நாள்.22.01.2018 ல் நிர்வாக அனுமதி ஒப்பதல் அளித்துள்ளது. மேலும், உள்ளாட்சிகளின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு, அரசு ஆணை (ப) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.2) நாள்.26.03.2020-ல் திட்ட மதிப்பீடு ரூ.330.31 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நிதி ஆதாரம் பின்வருமாறு (ரூ.கோடியில்)

| திட்டத்தின் பெயர்/ திட்ட எண் | திட்ட நிதி | | திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | இந்திய அரசு மான்யம் | தமிழக அரசு மான்யம் | உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு | | |
| | | | | | மாநக ராட்சி நிதி | ஆசிய வங்கி நிதி | |
| | அம்ரூத் திட்ட ஒதுக்கீடு | TNUIFSL மதிப்பீடு | | | | மான்யம் | கடன் |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் (பகுதி3) விரிவு படுத்தப்பட்ட பகுதி மண்டலம்-5, மண்டலம் -6ல் 1 பகுதி, மண்டலம் 7 முதல் 14 வரை (அம்ரூத் III – 26) | 264.12 | 330.31 | 132.06 | 52.82 | 40.78 | 54.69 | 49.96 |

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கிய அம்சங்கள் : -

| | | |
|---|---|---|
| 1 | கழிவுநீர் சேகரக் குழாயின் நீளம் | 331 கி.மீ |
| 2 | பிரதான கழிவுநீர் உந்துக் குழாய் நீளம் | 21.50 கி.மீ |
| 3 | பம்பிங் ஸ்டேஷன் | 7 எண்ணிக்கை |
| 4 | லிப்டிங் ஸ்டேஷன் | 11 எண்ணிக்கை |
| 5 | வழங்கப்படும் வீட்டிணைப்புகளின் எண்ணிக்கை | 32000 |

இத்திட்டத்திற்கான தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, 16.12.2019 அன்று மறுஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு 24.03.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை இப்பணிகளுக்காக ரூபாய்.4566.00 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது

## 9. உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி & இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பும் நிதி 2015-16:- இயந்திரம் இல்லா வாகனப் போக்குவரத்து ஏற்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் இயந்திரம் இல்லா வாகனப் போக்குவரத்தினை மேம்படுத்தும் வகையில் சாலையின் இருபுறமும் நடைபாதை அமைத்து, மையத் தடுப்புச் சுவர் கட்டுதல் மற்றும் பேவர் இயந்திரம் மூலம் சாலை அமைத்தல், இருபுறமும் மிதிவண்டி செல்வதற்கான தடம் ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டு ரூ.775.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ.800.00 இலட்சம் அரசு மான்யமாக பெறப்பட்டு, தற்பொழுது பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.



## 10. தூய்மை இந்தியா திட்டம் 2018–2019

இத்திட்டத்தின் கீழ் அய்யாளம்மன் படித்துறை, மணல்வாரி துறை, கொட்டப்பட்டு ஜே.ஜே.நகர் மற்றும் கோணக்கரை பகுதிகளில் வளங்கள் மீட்பு மையம் (Resource Recovery Centre) கட்டி, இம்மாநகராட்சியில் உருவாகி சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை, பிளாஸ்டிக் துகள்களாக மாற்றி சாலைப் பணிகளுக்கு பயன்படுத்த ரூ.84.30 இலட்சம் மதிப்பீட்டில் 4 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 3 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 1 பணி நடைபெற்று வருகிறது.




## 11. மாசுகட்டுப்பாட்டு வாரிய நிதி

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் வழங்கிய ரூ.50.00 இலட்சம் மான்யத்தில், அம்மா எக்கோ பெவிலியன் அமைப்பு, கோ.அபிஷேகபுரம் கோட்டம், அண்ணா நகர் அறிவியல் பூங்காவில் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

## 12. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு நிதி TURIP- 2019-20

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.17349/2019/இ3 நாள் 14.10.2019-ல், ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அரசு மான்யத் தொகை ரூ.800.00 இலட்சம் மற்றும் மாநகராட்சி பொது நிதி ரூ.200.00 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சிப் பகுதிகளில் கீழ்கண்டவாறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகள் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சாலை அமைத்தல் / மேம்படுத்துதல் – *14.309* கி.மீ. | 2 தொகுப்பு (20 பணிகள்) | 1000.00 |

தற்பொழுது அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதுவரை இப்பணிகளுக்காக ரூ.839.24 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை ரூ.200.00 இலட்சம் மான்யம் பெறப்பட்டுள்ளது.

## 13. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு நிதி TURIP- 2020-21

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.9025/2020/இ3 நாள்.17.07.2020-ல் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மான்யத் தொகை ரூ.375.00 இலட்சம் மற்றும் மாநகராட்சி பொது நிதி ரூ.125.00 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சிப் பகுதிகளில் கீழ்கண்டவாறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகள் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| *1* | சாலை அமைத்தல் / மேம்படுத்துதல் – *7.616* கி.மீ. | 2 தொகுப்பு (9 பணிகள்) | *500.00* |

தற்பொழுது அனைத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன.

## 14.சிறப்பு சாலைகள் திட்டம் (SRP 2020–21)

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் எண்.20557/2020/இ3–1 நாள் 23.12.2020ல் கீழ்கண்ட நிதி ஆதாரத்தின்படி சாலைப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

| வ.எண் | பணி | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம் (TNUDF) மூலம் கடன் | 2700.00 |
| 2 | மாநகராட்சி பொது நிதி | 300.00 |
| மொத்தம் | | 3000.00 |

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி 02.02.2021 அன்று பெறப்பட்டு, அனைத்துப் பணிகளும் துவக்கப்பட்டுள்ளது.

## 15. 15வது நிதிக்குழு பரிந்துரை நிதித் திட்டம் 2020–2021 (காற்று மாசுபடுதலை கட்டுப்படுத்துதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை)

இத்திட்டத்தின்கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிக்குள் காற்று மாசுபடுதலை கட்டுப்படுத்தவும் மற்றும் திறமையான திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ரூ.2100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து, மத்திய அரசிடமிருந்து நிதி பெறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், காற்று மாசுபாட்டின் அளவினை கணக்கிடவும், அதனை கட்டுப்படுத்தவும் ரூ.1050.00 இலட்சம் மதிப்பீட்டில் உபகரணங்கள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, கொள்முதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக புதைவடிகால் அடைப்புகளை மனித சக்தியைக் கொண்டு செயல்படுத்தாமல், இயந்திரங்கள் மூலம் செயல்படுத்த, 5 எண்ணிக்கை ரோபாட்டிக் சீவர் க்ளினிங் இயந்திரம் (Robotic Sewer Cleaning Machine) ரூ.205.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. மேலும், 2 எண்ணிக்கை இலகுரக வாகனங்கள் கொள்முதல் செய்யவும், ஏற்கனவே உள்ள 12 எண்ணிக்கை டம்பர் ப்ளேசர் (Dumper Placer) வாகனங்களை மாற்றியமைத்து திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகரம் – (Smart City)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சீர்மிகு நகரமாக மாற்றுவது குறித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, மத்திய அரசுக்கு 31.03.2017 அன்று சமர்ப்பிக்கப்பட்டு, மத்திய அரசு, அலுவலக ஆணை எண். K-15016 / 157 / 2015 – SC-1, நாள்.28.06.2017–ன்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி "சீர்மிகு நகரத் திட்டத்தினை" (Smart City Mission) செயல்படுத்த உகந்த நகரமாக தேர்வு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, இத்திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கு "தனி நோக்கு அமைப்பு" **(Special Purpose Vehicle)** அமைக்க அரசாணை எண்.109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.10.17 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனி நோக்கு அமைப்பிற்கான நிறுவனம் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, 22.12.2017 அன்று இந்திய நிறுவனங்களின் சட்டம் 2013ன் கீழ் திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகர நிறுவனம் என்ற பெயருடன் கூடிய நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

சீர்மிகு திட்டத்தின் கீழ், கீழ்கண்டவாறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 1. தில்லை நகர் பகுதியில் வணிக வளாகம் கட்டுதல்

தில்லைநகர் 7வது குறுக்குத் தெருவில் அடித்தள தளம், தரைத்தளம், முதல் தளம் இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களில் வாகன நிறுத்தத்துடன் கூடிய 52 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்ட ரூ.1500.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட அனுமதி பெறப்பட்டு பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இது வரை இப்பணிக்காக ரூ.902.73 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி தற்பொழுது முடியும் தருவாயில் உள்ளது.



## 2.பாதாள சாக்கடை திட்டம் – சீர்மிகு நகரத் திட்டத்தின் பங்களிப்பு (Convergence)

சீர்மிகு நகர திட்டம் செயலாக்கப்பகுதியில் அம்ரூத் பகுதி–II திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பாதாள சாக்கடை பணிகளுக்காக சீர்மிகு நகர திட்டத்திலிருந்து பங்களிப்பு தொகையாக ரூ.6561.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை புதைவடிகால் திட்டம் பகுதி – II மற்றும் பகுதி – III (UGSS PHASE II and III)ஆகிய பணிகளுக்காக மாநகராட்சி பங்குத் தொகையாக இத்தொகை முழுமையாக பயன்படுத்தப்பட்டது.

## 3. பையோ மைனிங் (Bio-Mining) அரியமங்கலம் குப்பை கிடங்கில் 40 ஆண்டுகளாக மண்டிக்கிடக்கும் குப்பைகளை தரம்பிரித்து நுண்ணுயிர் பிரித்து கையாளும் திட்டம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட அரியமங்கலம் குப்பை கிடங்கில் 47.70 ஏக்கர் பரப்பளவில் கொட்டப்பட்டுள்ள 7.59 லட்சம் க.மீ கொள்ளளவுள்ள கழிவுகளை விஞ்ஞான முறைப்படி தீர்வு கண்டு, 40 ஏக்கர் பரப்பை மீட்டுக் கொள்ள ரூ.5234.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட அனுமதி பெறப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. இது வரை இப்பணிக்காக ரூ.1827.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 4. உய்யக்கொண்டான் வாய்க்கால் கரை பகுதிகளில் வளர்ச்சித் திட்டப்பணி

மாநகராட்சியில் உள்ள உய்யக்கொண்டான் வாய்க்கால் செட்டிப்பாலம் முதல் குழுமி பகுதி வரை 2 கீ. மீ. நீளத்திற்கு பசுமை அமைப்புகள், நடைபாதை அமைத்தல், திறந்த வெளி ஆம்பி தியேட்டர் அமைப்புகள் கட்டுதல், சிறுவர் விளையாட்டு அமைப்புகள் மேற்கொள்ள ரூ.1832.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட அனுமதி பெறப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. இது வரை இப்பணிக்காக ரூ.749.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 5. மின் ஆற்றல் சேமிப்பு மின்விளக்குகள்

சீர்மிகு நகர திட்டம் செயலாக்கம் பகுதியில் ஏற்கனவே உள்ள மின் விளக்குகளை அகற்றிவிட்டு 20W /90W / 120W / 200W மின் சேமிப்பு விளக்குகளாக மாற்றம் செய்ய ரூ.2340.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்பொழுது பணி முழுமையாக முடிவுற்று, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்பணிக்காக மொத்தம் ரூ.2161.00 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



தில்லைநகர் 80 அடி ரோடு

## 6. மாநகராட்சி கட்டிடங்களின் மேற்கூரை பகுதிகளில் சூரிய ஒளி மின் சேமிப்பு தகடுகள் அமைக்கும் பணி

மாநகராட்சி அலுவலக கட்டிடங்கள் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான பிற கட்டிடங்களின் மேற்கூரைகளில் சூரிய ஒளி மின் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தி மின் ஆற்றல் உற்பத்தி செய்ய ரூ.671.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற்று பணி நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.409.42 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடையும் பொழுது ஆண்டொன்றிற்கு 12.13 இலட்சம் யூனிட்கள் மின்சார உற்பத்திச் செய்யப்பட்டு, அதன் மூலம் மின் பயனீட்டுக் கட்டணம் ரூ.77.00 இலட்சம் ஆண்டொன்றிற்கு சேமிப்பு செய்யப்படும்.



## 7. மேலரண் சாலையில் பன் அடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டுதல்

மேலரண் சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் (மாவட்ட மைய நூலகத்திற்கு அருகில்) 528 இரு சக்கர வாகனம், 142 நான்கு சக்கர வாகனம் நிறுத்தும் வசதி ஏற்படுத்த பன் அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்க ரூ.2118.00 லட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு, தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.570.45 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 8.பஞ்சப்பூரில் தரைமட்ட சூரிய ஒளி மின் ஆற்றல் சேமிப்பு தகடுகள் அமைத்து மின்னாற்றல் உற்பத்தி செய்யும் மையம் அமைத்தல்

திருச்சி மாநகராட்சி பஞ்சப்பூர் பகுதியில் 24 MwP திறனுள்ள தரைமட்ட சூரியஒளி மின் சேகரிப்பு மையம் மற்றும் சாலை அமைத்தல், தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் இந்த இடத்தை சுற்றி முள் வேலி தடுப்பு அமைக்க ரூ.1403.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதுவரை இப்பணிக்காக ரூ.1000.83 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவுறும் பொழுது ஆண்டொன்றிற்கு 3994 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு, இதன் மூலம் ரூ.2.23 கோடி மின் பயனீட்டுக் கட்டணத்தில் சேமிப்பு ஏற்படும்.



## 9. உறையூர் தினசரி சந்தையில் கூடுதல் கடைகள் கட்டுதல்

கோ–அபிஷேகபுரம் கோட்டம், புத்தூர் தினசரி சந்தையில் உள்ள கடைகளை உறையூர் தினசரி சந்தை வளாகத்திற்கு மாற்றி அமைக்கும் பொருட்டு புதிதாக கூடுதல் கடைகள் கட்டும் பணி ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது பணிகள் முழுமையாக முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. இதுவரை ரூபாய் 41.11 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## 10. காவேரி ஆற்றங்கரையில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்தல்

காவேரி ஆற்றங்கரையில் தடுப்பு சுவர் கட்டி அழகுப்படுத்தும் நோக்கில் 3 பணிகள் மொத்தம் ரூ.294.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.78.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. .

## 11. சத்திரம் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணிகள்

சத்திரம் பேருந்து நிலையத்தில் தரைத்தளத்தில் 30 பேருந்துகள் நிறுத்தும் வசதிகள், 33 கடைகள் (முதல் தளம்-11 மற்றும் தரை தளம்-22 ), 350 இரு சக்கர வாகன நிறுத்தம் (தரை மற்றும் முதல் தளம்) பேருந்து நிறுத்துமிடத்திற்கு தேவையான அனைத்து இதர வசதிகள் வழங்கி, அபிவிருத்திப் பணிகள் ரூ.1883.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதுவரை இப்பணிக்காக ரூ.1399.28 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



## 12. மாநகராட்சி அபிவிருத்தி பகுதிகளில் அறிவிப்பு பலகைகள் அமைத்தல்

சீர்மிகு நகர திட்டப் பகுதிகளில் வழிகாட்டி மற்றும் ஒளிரூட்டும் பெயர் பலகைகள் ரூ.415.00 இலட்ச மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

## 13. சுற்றுலா வளர்ச்சி பணி புராதன பூங்கா அமைக்கும் பணி

ஸ்ரீரங்கம் கோட்டம், பட்டர்வொர்த் சாலை உள்ள இடத்தில் புராதன பூங்கா அமைக்க ரூ.400.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தற்பொழுது பணி நடைபெற்று வருகிறது. இதுவரை இப்பணிக்காக ரூ.115.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 14. புராதான பூங்காவில் 6 எண்ணிக்கையிலான கற்சிலைகள் மற்றும் சுவர் ஓவியங்கள் வரையும் பணி

பட்டர்வொர்த் சாலையில் அமைக்கப்பட்டு வரும் புராதன பூங்காவில் 6 எண்ணிக்கை கற்சிலைகள் மற்றும் சுவர் ஓவியங்கள் வரைதல் போன்ற பணிகள் ரூ.196.00 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.



## 15. சுற்றுலா மேம்பாடு – மலைக்கோட்டை ஒளிரூட்டும் பணி (DBOT முறையில்)

மலைக்கோட்டையை சுற்றி மின்விளக்குகளினால் அழகுப்படுத்தும் பணி (Design, Build, Operate and Transfer முறையில் ரூ.1136.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி துவக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.432.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 16. பட்டர்வொர்த் சாலை சத்துணவு மையம் மற்றும் சீர்மிகு கழிவறை கட்டுதல்

ஸ்ரீரங்கம் கோட்டம், பட்டர்வொர்த் சாலையில் உள்ள பழைய சத்துணவு மையத்தை இடித்துவிட்டு ஸ்மார்ட் சத்துணவு மையம் மற்றும் குழந்தைகளுக்கான சீர்மிகு கழிவறை கட்டும் பணி ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

## 17. முக்கியமான சாலை சந்திப்புகளில் உலோக சிலை அமைத்தல்

சீர்மிகு நகர அபிவிருத்தி பகுதிகளில் உள்ள முக்கிய சாலை சந்திப்புகளில் உலோக சிலை அமைக்க ரூ.98.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

## 18. நுண்உரக்கிடங்குகள் கட்டுதல் மற்றும் அரவை இயந்திரம் அமைக்கும் பணி

சீர்மிகு நகர அபிவிருத்தி பகுதிகளில் 4 இடங்களில் வீடுகளிலிருந்து பெறப்படும் குப்பைகளை உரமாக்கும் மையங்கள் கட்டுதல் மற்றும் 6 இடங்களில் குப்பைகளை துகள்களாக அரைக்கும் அறவை இயந்திரம் அமைக்கும் பணி ரூ.240.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.36.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 19. புத்தூர் வணிக வளாகம் கட்டும் பணி

கோ–அபிஷேகபுரம் கோட்டத்திற்கு உட்பட்ட புத்தூர் தினசரி சந்தை வளாகத்தில் புதிதாக வணிக வளாகம் கட்டும் பணி ரூ.2091.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதுவரை இப்பணிக்காக ரூ.397.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 20. காளியம்மன் கோவில் பகுதியில் பன் அடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டுதல்

ஸ்ரீரங்கம் கோட்டம், காளியம்மன் கோயில் தெரு பகுதியில் பன்அடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி ரூ.619.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.19.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 21.நந்தி கோயில் தெருவில் தினசரி சந்தை அமைக்கும் பணி

ஸ்ரீரங்கம் கோட்டம் நந்தி கோயில் தெருவிலுள்ள தினசரி சந்தையை இடித்துவிட்டு புதிதாக நவீன வசதிகளுடன் கட்ட மதிப்பீடு ரூ.98.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

## 22.சீர்மிகு மழைநீர் வடிகால், குறுக்கு பாலங்கள், வாய்க்கால்களில் தாங்குசுவர் கட்டுதல்

சீர்மிகு திட்டப்பகுதிகளில் சீர்மிகு மழைநீர் வடிகால், குறுக்கு பாலங்கள் மற்றும் வாய்க்கால்களில் தாங்கு சுவர் அமைத்தல் போன்ற 50 பணிகள் (பகுதி 1) ரூ.4730.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.1510.00 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.




## 23. சீர்மிகு மழைநீர் வடிகால், சிறுபாலங்கள் மற்றும் சீர்மிகு தாங்குசுவர் கட்டும் பணிகள் மேற்கொள்தல்

சீர்மிகு நகர அபிவிருத்தி பகுதிகளில் சீர்மிகு மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும் வாய்க்கால்களில் சீர்மிகு தாங்கு சுவர் கட்டுதல் போன்ற 22 பணிகள் (பகுதி – II) ரூ.2233.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை ரூ.1800.00 இலட்சம் செலவிடப்பட்டு, அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிவுற்றுள்ளது.

**24. சுற்றுலா மேம்பாடு – தெப்பக்குளத்தில் ஒலி ஒளி காட்சி அமைப்புகள் ஏற்படுத்துதல்**

மெயின்கார்டுகேட் பகுதியில் உள்ள தெப்பக்குளத்தில் ஒலி ஒளி காட்சி அமைப்புகள் DBOT முறையில் ஏற்படுத்தும் பணி ரூ.880.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.74.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது

**25. இரட்டை வாய்க்கால் மற்றும் கோட்டை வாய்க்கால் பகுதியில் தாங்கு சுவர் கட்டும் பணி**

சீர்மிகு நகர அபிவிருத்தி பகுதிகளில் உள்ள இரட்டை வாய்க்கால் மற்றும் கோட்டை வாய்க்கால்களில் தாங்குசுவர் கட்டுவதற்கு 2 பணிகள் ரூ.330.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.150.34 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது

**26. அண்ணா நகர் இணைப்பு சாலையில் கிழக்கு பகுதியில் எம்.ஜி.ஆர் சிலை முதல் அண்ணாநகர் பாலம் வரை மழைநீர் வடிகால் மீது பாதசாரிகள் நடைபாதை அமைத்தல்**

அண்ணா நகர் இணைப்பு சாலையில், கிழக்கு பகுதியில் எம்.ஜி.ஆர் சிலை முதல் அண்ணாநகர் பாலம் வரை மழைநீர் வடிகால் மீது பாதசாரிகள் நடைபாதை அமைக்கும் பணி ரூ.95.00 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது

**27. திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 3.3 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக வாகனங்கள் 27 எண்ணிக்கை கொள்முதல் செய்தல்**

திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 3.3 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக வாகனங்கள் 27 எண்ணிக்கை ரூ.241.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

**28.பஞ்சக்கரை பகுதியில் திரு.சர்.சி.வி.இராமன் (STEM Park) பூங்கா அமைத்தல்**

ஸ்ரீரங்கம் பகுதியில் உள்ள பஞ்சக்கரையில், நோபல் பரிசு வென்ற திரு.சர்.சி.வி.இராமன் நினைவு STEM Park அமைக்கும் பணி ரூ.1555.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

**29.தில்லைநகர் வணிக வளாகத்தில் அனைத்து தளங்களில் சாய்வு தளம் அமைத்தல் மற்றும் தீயணைப்பு ஏற்பாடுகள் செய்தல்**

தில்லைநகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் வணிகவளாகத்தில் அனைத்து தளங்களுக்கும் செல்ல சாய்வு தளம் (Ramp) அமைத்தல், தீயணைப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் False Ceiling அமைத்தல் போன்ற பணிகள் ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது.

## 30. உய்யக்கொண்டான் கால்வாய் கரை பகுதியில் கூடுதல் பணிகள் மேற்கொள்தல்

உய்யக்கொண்டான் கால்வாய் கரை பகுதியில் கூடுதல் பணிகள் ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 31. மழைநீர் வடிகால் மற்றும் வாய்க்காலில் RCC ஸ்லாப் அமைத்தல்

சீர்மிகு நகரம் அபிவிருத்தி பகுதிகளில் 5 பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் வாய்க்கால்களில் RCC ஸ்லாப் கொண்டு மூடும் பணிக்கு ரூ.407.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றது.

## 32. மாரிஸ் மேம்பாலம் பகுதியில் தாங்கு சுவர் கட்டும் பணி

ஸ்ரீரங்கம் கோட்டம், மாரிஸ் மேம்பாலம் பகுதியில் தாங்குசுவர் கட்ட ரூ.282.00 இலட்சத்திற்கு 3 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பணிகள் துவக்கப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளது.

## 33. கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு பணிகள் துவக்கப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளது

| வ.எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாடு (ICCC) அறை அமைக்கும் பணி | 1232.00 |
| 2 | ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாடு (ICCC) அறை கட்டும் பணி | 186.00 |
| 3 | 9 இடங்களில் 9 மீ உயரமுள்ள சோலார் அதி உயர மின் விளக்கு கோபுரம் அமைத்தல் | 85.00 |

## 34. கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு, வேலை துவக்கப்படும் நிலையில் உள்ளது.

| வ.எண் | பணி தலைப்பு | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | அண்ணாநகர் மற்றும் புத்தூர் பகுதிகளில் பழுதடைந்த குடிநீர் குழாய்கள் மாற்றி அமைத்தல் | 915.00 |
| 2 | தில்லைநகர் பகுதியில் பழுதடைந்த குடிநீர் குழாய்கள் மாற்றி அமைத்தல் | 804.00 |
| 3 | உறையூர் பகுதியில் பழுதடைந்த குடிநீர் குழாய்கள் மாற்றி அமைத்தல் | 703.00 |
| 4 | மரக்கடை பகுதியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி, குடிநீர் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் புதுப்பிக்கும் பணி | 750.00 |
| 5 | மலைக்கோட்டை, தில்லைநகர், அண்ணா நகர் மற்றும் சிந்தாமணி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மேம்படுத்தும் பணி | 200.00 |
| 6 | சிந்தாமணி பகுதிகளில் குடிநீர் வழங்கல் அமைப்பின் புனரமைக்கும் பணி | 800.00 |

| | | |
|---|---|---|
| 7 | மரக்கடை பகுதிகளில் குடிநீர் வழங்கல் அமைப்பின் புனரமைக்கும் பணி | 1025.00 |
| 8 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் கழிவுநீர் மறுசீரமைக்கும் பணி பகுதி–1 அ (Block-1, 2 and 2A) | 5600.00 |
| 9 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் கழிவுநீர் மறுசீரமைக்கும் பணி பகுதி–1 ஆ (Block-3 and 4) | 5075.00 |
| 10 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சீர்மிகு நகரத் திட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் கழிவுநீர் மறுசீரமைக்கும் பணி பகுதி–1 இ (Block-5 and 6) | 5964.00 |

## 35. திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இலகுரக மின்கல வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணி

மாநகராட்சிப் பகுதியில் மோட்டார் வாகனங்கள் செல்ல இயலாத குறுகிய சந்து, சிறிய சாலைப் பகுதிகளில் குடியிருப்போர்களிடமிருந்து குப்பைகளை முதல்நிலை சேகரம் செய்ய புதியதாக மின்கலன் மூலம் இயங்கும் சிறிய இலகுரக வாகனங்கள் ( பேட்டரி வாகனங்கள்) 100 எண்ணிக்கை ரூ.220.00 இலட்சத்தில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பொது நிதி

### 1. மீன் சந்தையில் கூடுதல் பணிகள் மேற்கொள்தல்

காசி விளங்கி பகுதியில் கட்டப்பட்டுள்ள மீன் சந்தையில் சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை அமைத்தல், கூடுதல் கடைகள் கட்டுதல் போன்ற பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

### 2.மியாவாகி குறுங்காடுகள் அமைத்தல்

ஸ்ரீரங்கம் கோட்டம் சீனிவாச நகர் பகுதியில் 3375 சதுரமீட்டர் பரப்பளவிலும், சஞ்சீவி நகர் பகுதியில் 4220 சதுரமீட்டர் பரப்பளவிலும், பாலாஜி அவின்யூ பகுதியில் 2020 சதுரமீட்டர் பரப்பளவிலும் மற்றும் சென்னை பிரதான சாலையில் உள்ள பெருமாள்புரம் பகுதி 8320 சதுரமீட்டர் பரப்பளவிலும், தெற்கு தேவி தெரு பகுதியில் 9205 சதுரமீட்டர் பரப்பளவிலும் மியாவாகி குறுங்காடுகள் அமைக்கப்பட்டுள்ளது.





### 3. திறந்தவெளி உடற்பயிற்சி கூடம்

ஸ்ரீரங்கம் கோட்டம், கார்த்திகேயன் கார்டன் பூங்கா, அரியமங்கலம் கோட்டம் சேதுராம்பிள்ளை காலனி, பாலாஜி நகர் மற்றும் பொன்மலைக் கோட்டம் அன்பில் நகர் பூங்கா, பாரதி பூங்கா, சுப்பிரமணிய நகர் ஆகிய பகுதிகளில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் ரூ.114.67 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### 4. பூங்காக்கள்

ஸ்ரீரங்கம் கோட்டம், மங்கம்மா நகரில் வைஜெயந்தி வித்யாலயா அருகில் பூங்கா அமைக்கும் பணி மற்றும் கோ–அபிஷேகபுரம் கோட்டம் எம்.எம் நகர் பகுதியில் உள்ள பூங்காவில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளும் பணி முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது இத்தலைப்பின் கீழ் ரூ.317.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 5.நவீன பொதுக்கழிப்பிடம் கட்டுதல்

பொதுமக்கள் அதிகளவில் கூடுமிடமான மெயின்–கார்ட்–கேட், மேலரண் சாலை கிழக்குப் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய பொதுக்கழிப்பிடம் ரூ.17.11 இலட்சம் செலவில் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது.



## 5. நவீன இறகு பந்து உள் விளையாட்டரங்கம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் அனைவரும் பயன்படும் பொருட்டு நவீன இறகு பந்து உள் விளையாட்டரங்கம் ரூ.18.95 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.





## 6. அம்மா மினி கிளினிக்குகள் அமைக்கும் பணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கொள்கை முடிவின்படியும் மற்றும் அரசாணை எண்.530 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை நாள்.05.12.2020–ன் படியும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட கே–சாத்தனூர், செந்தண்ணீர்புரம் சுப்பைய்யா தெரு மற்றும் தென்னூர் மேம்பாலத்தின் கீழ், புதியதாக 3 அம்மா மினி கிளினிக்குகள் அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது.



மேலும், ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் புதியதாக 1 அம்மா மினி கிளினிக் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென அரசிடமிருந்து துவக்க மான்யமாக ரூ.2.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

## கல்வி நிதி

2020–2021 கல்வியாண்டில் கீழ்கண்ட விவரப்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1 | பீமநகர் மேட்டுத் தெரு மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடப்பாண்டில் ரூ.41.79 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| 2 | கிழக்கு சித்திரை வீதி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் அபிவிருத்தி பணிகள் ரூ.62.21 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| 3 | எடமலைப்பட்டிபுதூர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டு நடப்பாண்டில் ரூ.31.56 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |
| 4 | பிராட்டியூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பழைய பழுதடைந்த கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு நடப்பாண்டில் ரூ.15.26 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. |
| 5 | தென்னூர் மாநகராட்சி துவக்கப்பள்ளியில் சமையலறை மற்றும் கனிணி வகுப்பறை கட்டும் பணி மற்றும் அபிவிருத்தி பணிகள் ரூ.41.11 இலட்சம் செலவில் இரண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |
| 6 | உறையூர் மேட்டுத் தெரு மாநகராட்சி துவக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர், பேவர் பிளாக் தளம் மற்றும் அபிவிருத்தி பணிகள் ரூ.18.34 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |
| 7 | தெற்கு உக்கடை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.14.29 இலட்சம் செலவில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |
| 8 | மணியக்காரத் தெரு மாநகராட்சி துவக்கப்பள்ளியில் அபிவிருத்தி பணிகள் ரூ.10.18 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |
| 9 | வரகனேரி முஸ்லீம் தெரு மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் மராமத்து பணிகள் ரூ.7.97 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |

| | |
|---|---|
| 10 | கே.கே.நகர் மாநகராட்சி துவக்கப்பள்ளியில் அபிவிருத்தி பணிகள் ரூ.25.13 இலட்சம் செலவில மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |
| 11 | தேவி தெரு மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் அபிவிருத்தி பணிகள் ரூ.33.96 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |
| 12 | ஜான்சி நகர் மாநகராட்சி துவக்கப்பள்ளியில் அபிவிருத்தி பணிகள் ரூ.20.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது |
| 13 | சோழராஜபுரம் மாநகராட்சி துவக்கப்பள்ளி, வாலாஜா ரோடு உறையூர் வடக்கு மாநகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் பாண்டமங்கலம் துவக்கப்பள்ளியில் ரூ.22.20 இலட்சம் செலவில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| 14 | கொத்தமங்கலம் மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மராமத்து பணிகள் ரூ.22.85 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| 15 | கே.கே.நகர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் ரூ.9.87 இலட்சம் செலவில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| 16 | காமராஜ் நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.3.73 இலட்சம் செலவில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| 17 | கீழ தேவதானம் மாநகராட்சி துவக்கப்பள்ளியில் ரூ.22.10 இலட்சம் செலவில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது |

மேலும் ஸ்மார்ட் கிளாஸ் பணிகள் மற்றும் இதர மராமத்து பணிகள் ரூ.212.32 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

TIRUCHIRAPPALLI CITY CORPORATION
CORPORATION MIDDLE SCHOOL RENGA NAGAR





CLASS ROOM-1





## பொது சுகாதாரம்

### 1. டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவி திட்டம்

டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகள் மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை பெற்று பிரசவிக்கும் தாய்மார்களுக்கு ரூபாய் 18000/– (ரூபாய் 14000 வங்கி கணக்கில் ரொக்கமாகவும், ரூபாய் 4000 மதிப்புள்ள தாய்சேய் நல பெட்டகமாகவும்) வழங்கப்பட்டு வருகிறது. மொத்தம் 9821 கர்ப்பிணி பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

### 2. ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

இத்திட்டத்தின் கீழ் கர்ப்பக்கால சிசு இறப்பு வீதத்தை தடுக்கவும். பிரசவ காலத்தின் போது தாய்மார்களின் இறப்பு வீதத்தை குறைக்கவும், 19 வயதிற்கு மேற்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு தேசிய ஊரக சுகாதார முகமையின் கீழ் ரூபாய் 600/–க்கான காசோலை வழங்கப்பட்டு வருகிறது. இது வரை, 739 கர்ப்பிணி பெண்களுக்கு இத்திட்டத்தின் கீழ், ரூ.4,43,400/– வழங்கப்பட்டுள்ளது.

### 3. வெளி நோயாளிகள் வருகை

இம்மாநகராட்சிப் பகுதியில் செயல்படும் 18 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 8 மருந்தகங்களிலும் சிறுசிறு நோய்களுக்காக சுமார் 584534 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு இலவசமாக மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும் மாநகராட்சி பகுதியில் செயல்படும் 3 சித்த மருந்தகங்கள் மூலம் சுமார் 34614 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு இலவசமாக சித்தா மருந்துகள் வழங்கப்பட்டது. 33 நபர்களுக்கு இலவச குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் | 18 | 584534 |
| 2. | மருந்தகங்கள் | 8 | |
| 3. | சித்த மருந்தகங்கள் | 3 | 36414 |
| 4 | உறையூர் குடும்ப நல அறுவை அரங்கம் | 1 | 33 |

## 4. டெங்கு காய்ச்சல் முன்தடுப்பு நடவடிக்கை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 65 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. டெங்கு காய்ச்சல் குறித்த துண்டு பிரசுரங்கள், அறிவிப்புகள் மற்றும் விளம்பர பதாகைகள் வாயிலாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் வீடுகள் தோறும் கொசுப்புழு ஆதார நிலை ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள இம்மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர்கள், இளநிலை பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் டெங்கு கொசுப்புழு ஆதார நிலைகள் கண்டறிந்து அழிக்கப்பட்டது. இதன் மூலம் 2020–2021 ஆண்டில் டெங்கு காய்ச்சல் கட்டுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, டெங்கு ஆதாரங்களை கண்டறியும் இடங்களில் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து அபராதக் கட்டணம் விதித்து, ரூபாய் 2.44 இலட்சம் இதுவரை வசூலிக்கப்பட்டுள்ளது.

## கோவிட் 19 – பெருந்தொற்று தடுப்பு நடவடிக்கைகள்

கோவிட் 19 – பெருந்தொற்று பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்கள், தன்னார்வ நிறுவனங்கள், கொடையாளர்கள் ஒத்துழைப்புடன் பல்வேறு நடடிவக்கைகள் இம்மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டன. அதன் ஒரு பகுதியாக, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பேருந்து நிலையங்கள், சந்தைகள், ஏடிஎம் மையங்கள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் கூடக்கூடிய இடங்கள் ஆகியவற்றில் கிருமி நீக்கம் செய்யும் பணிகள், போர்க்கால அடிப்படையில் நடைபெற்றது.

இப்பணிக்காக சோடியம் ஹைப்போ குளோரைடு, பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் லைசால் போன்ற கிருமிநாசினிகள் ரூ.73.19 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது. மேலும், கிருமிநாசினிகள் பயன்படுத்தப்படும் பணிக்கு தேவையான தெளிப்பான்கள் ரூ.6.26 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டது.

கொரோன வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், துப்புரவு ஆய்வர்கள், துப்புரவு அலுவலர்கள், இதரப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், கைகளை கழுவுவதற்கு தேவையான திரவங்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடிய ஹோமியோபதி மருந்துகள் ரூ.91.73 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

மேலும், கோவிட் 19 வைரஸ் தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு சளி, காய்ச்சல், இருமல் போன்றவை ஏதும் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய 100000 எண்ணிக்கை கணக்கெடுப்பு படிவங்கள், தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் உருவாகும் குப்பைகளை தனியாக சேகரிப்பதற்கு 50000 எண்ணிக்கை மஞ்சள் நிற பைகள், ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்த காலத்தில் பொதுமக்கள் அதிகளவில் வெளியே வருவதை தடுக்கும் பொருட்டு 310000 எண்ணிக்கை அனுமதி அட்டைகள், வெப்பநிலை பரிசோதிக்கும் கருவி 10 எண்ணிக்கைகள், கோவிட் 19 வைரஸ் தொற்று குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த 100000 எண்ணிக்கை துண்டு பிரசுரங்கள் மற்றும் 900 எண்ணிக்கை சுவரொட்டிகள் அச்சடிக்கும் பணிகள் என மொத்தம் ரூ.32.81 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பொதுமக்கள் அதிகமாக கூடும் காந்தி சந்தை, மூடப்பட்டு கூட்டம் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு, அந்தந்த பகுதிகளில் தற்காலிக சந்தைகள் உருவாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு காய்கறிகள் விற்பனைக்கு வழிவகை செய்யப்பட்டது. மேலும், கொரோனா பெருந்தொற்று உச்சத்தில் இருந்த கால கட்டத்தில் மாநகராட்சியால் வாகனங்கள் மூலம் காய்கறிகள் தெருக்களில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

மேலும், கோவிட்–19 பெருந்தொற்று பாதிப்புக்குள்ளான நோயாளிகள் வசித்த தெருக்கள் தனிமைப்படுத்தப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு கபசுர குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டு, மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, நோய் கட்டுப்படுத்தப்பட்டது. மேலும், இப்பகுதி மக்களுக்கு அடிப்படை தேவையான உணவுப் பொருட்கள், காய்கறிகள் எளிதாக கிடைக்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டது.

இது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டமையால், நோயின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டதுடன், இறப்பு எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது.

## 2021–2022 ஆம் ஆண்டில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள்

### பொதுநிதி

#### 1. சாலைகள்

அ) மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 13.33கி.மீ நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கும், 8.33கி.மீ நீளமுள்ள மண் சாலைகளை தார்சாலைகளாகவும், 1.25 கி.மீ நீளமுள்ள மண்சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுவதற்கும், 1.36 கி.மீ நீளமுள்ள சிமெண்ட் கான்கிரீட் சாலைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் சாலைகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுவதற்கும் மொத்தம் ரூ.400.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ).புதைவடிகால் அமைப்புகள் ஏற்படுத்தியதால் பழுதான சாலைகளை சீரமைத்தல்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தற்பொழுது புதைவடிகால் திட்டம் பகுதி II & IIIல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் தோண்டப்படும் சாலை பள்ளங்களை சீரமைக்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த பணிகள் மேற்கொள்ளும் போது அதிகமாக சேதப்படும் சாலைகளை உடனடியாக சீர் செய்ய ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (சுமார் 7.70 கி.மீட்டர்)

#### 2. மழைநீர் வடிகால் அமைத்தல்

மாநகராட்சிப் பகுதியில் 3.35 கி.மீ நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால் அமைப்பதற்கும் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைப்பதற்கும், 3.50 கி.மீ நீளத்திற்கு பழைய மழைநீர் வடிகால்களை மேட்படுத்துவதற்கும் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் மேம்படுத்துவதற்கும் ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாய்க்கால்கள் மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகள் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## பிற திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் பற்றிய விவரம்

### 1.தமிழ்நாடு புதுமை நிதி (TANII)

பொன்மலைக் கோட்டத்திற்குட்பபட்ட குதுப்பாபள்ளம் பகுதியில் நவீன மயமாக்கப்பட்ட கல்வி மையம் அமைக்க மேற்கண்ட திட்டத்தின் கீழ் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி எதிர்நோக்கப்பட்டுள்ளது.

### 2.தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம் 2021–2022

இத்திட்டத்தில், கீழ்க்கண்ட இடங்களில் உள்ள தேசிய நகர்ப்புற சுகாதார மையங்களில் அபிவிருத்தி/புதிதாக மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணி ரூ.229.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்ட இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | தேசிய நகர்ப்புற சுகாதார மையம் அமைந்துள்ள இடம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.4க்குட்பட்ட திருவானைக்கோவில் இளநிலைப் பொறியாளர் அலுவலக வளாகம் | 35.00 |
| 2 | வார்டு எண்.22க்குட்பட்ட இருதயபுரம் மருத்துவமனை வளாகம் | 99.00 |
| 3 | வார்டு எண்.35க்குட்பட்ட காமராஜ் நகர் | 95.00 |
| | மொத்தம் | 229.00 |

### கல்வி நிதி

மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்களில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில், கோட்டத்திற்கு ஒரு பள்ளிவீதம் தேர்வு செய்யப்பட்டு அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய நான்கு மாதிரிப் பள்ளிகள் (Model School) தலா ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# 2021-2022 ஆம் ஆண்டில் சீர்மிகு நகரத் திட்டத்தின் (Smart City Mission) கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்

| வ.எண் | பணிகள் |
|---|---|
| 1 | சீர்மிகு திட்டம் அபிவிருத்தி பகுதிகளில் உள்ள சாலைகளில் மழைநீர் சேகரிப்புகள் ரூ.180.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்துதல் |
| 2. | மேலரண் சாலை, மரக்கடை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள கடைகளுக்கு தற்காலிகமாக மதுரை சாலையில் இடமாற்றம் செய்யும் பொருட்டு ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் தற்காலிக கடைகள் கட்டும் பணி |
| 3 | கீழரண் சாலையில் மைய தடுப்பு சுவர், பூச்செடிகள் வைக்க தேவையான வசதிகளுடன், ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுதல் |
| 4 | குடிநீர் விநியோக பணிகளை மேம்படுத்த தலைமை நீர் பணி நிலையங்களை புதுப்பித்தல், SCADA அமைப்புகள் ஏற்படுத்துதல், தரைமட்ட நீர்தேக்க தொட்டி கட்டுதல், மோட்டார் மாற்றியமைத்தல் போன்ற பணிகள் ரூ.5183.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்தல் |
| 5 | சீர்மிகு திட்டம் அபிவிருத்தி பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை வடிவமைப்பை புனரமைக்கும் பணிக்கு ரூ.20100.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 6 | பஞ்சப்பூர் பகுதியில் 7.5 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் DEBOT முறையில் ரூ.1328.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணி |
| 7 | சிந்தாமணி பகுதியில் உள்ள குடிநீர் வடிவமைப்பை புனரமைக்கும் பணி ரூ.800.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 8 | மரக்கடை பகுதியில் உள்ள பழைய குடிநீர் குழாய்களுக்கு பதிலாக புதிய குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி ரூ.1025.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 9 | மலைக் கோட்டை பகுதியில் உள்ள பழைய குடிநீர் குழாய்களுக்கு பதிலாக புதிய குழாய் பதிக்கும் பணி ரூ.980.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 10 | சாலை சுத்தப்படுத்தும் (Road sweeping) கனரக இயந்திர வாகனம் 2 எண்ணிக்கை ரூ.173.00 இலட்சத்தில் வாங்கி திடக்கழிவு பணிகள் மேற்கொள்தல் |
| 11 | சத்திரம் பேருந்து நிலையத்தில் சிமெண்ட் கான்கீரிட் நடைபாதை அமைத்தல், தாங்கு சுவர் கட்டுதல், மின் பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற கூடுதல் பணிகள் ரூ.850.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |

| | |
|---|---|
| 12 | மரக்கடையில் புதிதாக 30 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் உந்து குழாய் மாற்றியமைத்தல் போன்ற பணிகள் ரூ.750.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 13 | மரக்கடை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் கடைகள் கட்டும் பணி ரூ.900.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 14 | சீர்மிகு நகரம் செயலாக்கப் பகுதிகளில் நடைபாதை அமைத்தல் மற்றும் குறுக்கு பாலம் கட்டும் பணி ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்தல் |
| 15 | கீழரண் சாலையில் மீன் மார்க்கெட் குளிருட்டும் கருவிகள் வசதியுடன் கட்டிடம் கட்டும் பணி ரூ.1300.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 16 | கீழரண் சாலையில் மார்க்கெட் மற்றும் கடைகள் கட்டிடம் கட்ட ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்தல் |
| 17 | கீழரண் சாலையில் லாரி நிறுத்துமிடம் ரூ.1400.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 18 | மதுரை சாலையில் மாநகராட்சி வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் வணிக வளாகம் கட்டும் பணி ரூ.1400.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 19 | பஞ்சப்பூர் பகுதியில் 2.4 MwP திறன் கொண்ட 3 எண்ணிக்கை தரைமட்ட சூரிய ஒளி மின் சேகரிப்பு அமைப்புகள் ரூ.3750.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 20 | பஞ்சப்பூர் பகுதியில் மின் விளக்குகள் ஏற்படுத்துதல், CCTV கேமராக்கள் பொருத்துதல், மின்வாரியத்திற்கு 7.2 Mwp சூரிய ஒளி மின்சாரத்தினை மாற்றுவதற்கான சேகரிப்பு அமைப்புகளுக்கான டிரான்ஸ்பார்மர் அமைக்க செலுத்த வேண்டிய பணம் கட்டுதல் போன்ற பணிகள் ரூ.650.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது |
| 21 | பஞ்சப்பூர் பகுதியில் ஏற்படுத்த போகும் சூரிய மின் சேகரிப்பு அமைப்பு வளாகத்துக்கு தேவையான சாலை வசதி, காப்பாளர் அறை, கழிப்பறைகள் போன்ற வசதிகள் ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்தல் |
| 22 | திருச்சி மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்காக Semi Earthen Bin - 175 Nos மற்றும் Crane Mounted Vehicle – 5 Nos வாங்க ரூ.1400.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்தல் |

# 2021–2022ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| விபரம் | வருவாய் நிதி | குடிநீர் நிதி | மூலதன நிதி | NULM | NUHM | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| வரவு | 28969.50 | 6997.04 | 94900.00 | 60.00 | 300.00 | 131226.54 |
| செலவு | 24435.90 | 5657.20 | 100635.00 | 110.00 | 300.00 | 131138.10 |
| | உபரி | | | | | 88.44 |

## கல்வி நிதி

(ரூபாய் இலட்சத்தில்)

| விவரம் | 2021–2022 திட்ட மதிப்பீடு |
|---|---|
| வரவு | 1273.00 |
| செலவு<br>வருவாய் நிதி<br>செலவு – 221.50<br>மூலதன பணிகள் – 635.00<br>மொத்தம் – 856.50 | 856.50 |
| கல்வி நிதி உபரி | 416.50 |

(ஒம்)–தனி அலுவலர் மற்றும் ஆணையர்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

## விளைபயன்

## வரவு செலவு திட்டம்

## 2021 - 2022






# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
## 2020–2021ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2021–2022ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு
## சுருக்கம்

### வரவினங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | இனம் | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் நிதி | 26954.50 | 28897.00 | 28969.50 |
| 2 | குடிநீர் நிதி | 9607.55 | 6602.04 | 6997.04 |
| 3 | மூலதன நிதி | 96735.00 | 51716.00 | 94900.00 |
| 4 | தேசிய நகர்ப்புற வாழ்வதார திட்டம் | 50.00 | 50.00 | 60.00 |
| 5 | தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம் | 200.00 | 300.00 | 300.00 |
| | **மொத்தம் (அ)** | **133547.05** | **87565.04** | **131226.54** |

### செலவினங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | இனம் | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் நிதி | 22890.20 | 21962.40 | 24435.90 |
| 2 | குடிநீர் நிதி | 5664.20 | 5070.20 | 5657.20 |
| 3 | மூலதன நிதி | 102905.00 | 59556.00 | 99810.00 |
| 4 | குடிநீர் நிதியிலிருந்து மூலதன பணிகளுக்கு ஒதுக்கீடு | 1745.00 | 540.00 | 825.00 |
| 5 | தேசிய நகர்ப்புற வாழ்வதார திட்டம் | 100.00 | 100.00 | 110.00 |
| 6 | தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம் | 200.00 | 300.00 | 300.00 |
| | **மொத்தம் (ஆ)** | **133504.40** | **87528.60** | **131138.10** |

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | இனம் | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| | வரவு – அ | **133547.05** | **87565.04** | **131226.54** |
| | செலவு – ஆ | **133504.40** | **87528.60** | **131138.10** |
| | உபரி (அ–ஆ) | **42.65** | **36.44** | **88.44** |

## கல்வி நிதி

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | இனம் | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| 1 | வரவு | 1451.00 | 1161.00 | 1273.00 |
| | மொத்தம் (1) | **1451.00** | **1161.00** | **1273.00** |
| 2 | செலவு | | | |
| | அ. வருவாய் நிதி செலவு | 376.50 | 196.50 | 221.50 |
| | ஆ. மூலதன நிதி செலவு | 1050.00 | 730.00 | 635.00 |
| | மொத்தம் (2 ) (அ+ஆ) | **1426.50** | **926.50** | **856.50** |
| | கல்வி நிதி உபரி (1–2) | **24.50** | **234.50** | **416.50** |

# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
# 2021–2022 திட்ட மதிப்பீடு
## வருவாய் நிதி / குடிநீர் நிதி / கல்வி நிதி
## வரவினம்




(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | இனம் | 2021–2022 (திட்ட மதிப்பீடு) | % |
|---|---|---|---|
| அ | சொத்துவரி | 7825.00 | 21 |
| ஆ | பிற நிறுவனங்களில் வசூலாகும் வருவாய் | 2900.00 | 8 |
| இ | மாநகராட்சி சொத்துக்களிலிருந்து வரும் வாடகை வருமானம் | 2986.50 | 8 |
| ஈ | சேவை கட்டணம் மற்றும் கட்டணங்கள் | 9408.04 | 25 |
| உ | மான்யம் மற்றும் பங்குத் தொகைகள் | 12010.00 | 32 |
| ஊ | பிற வருமானங்கள் | 2110.00 | 6 |
| | **மொத்தம்** | **37239.54** | **100** |

# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

## 2021–2022 திட்ட மதிப்பீடு

### வருவாய் நிதி / குடிநீர் நிதி / கல்வி நிதி

### செலவினம்




(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | இனம் | 2021–2022 (திட்ட மதிப்பீடு) | % |
|---|---|---|---|
| அ | ஊதியம் மற்றும் ஓய்வூதியம் | 16066.00 | 53 |
| ஆ | பிற செலவின ஊதியங்கள் | 3167.90 | 10 |
| இ | நிர்வாகச் செலவினங்கள் | 1232.50 | 4 |
| ஈ | பழுது மற்றும் பராமரிப்பு செலவினங்கள் | 7112.70 | 24 |
| உ | நிதி செலவினங்கள் | 1801.50 | 6 |
| ஊ | பிற செலவினங்கள் | 934.00 | 3 |
| | **மொத்தம்** | **30,314.60** | 100 |

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
## 2020–2021ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு மற்றும்
## 2021–2022ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு
## வருவாய் நிதி – வரவினங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| தலைப்பு எண் | | | இனம் | 2019–2020 (கணக்கின் படி) | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|---|---|---|
| 110 | 1. சொத்துவரி | | | | | | |
| 110 | 01 | 01 | சொத்து வரி–பொது காரியங்கள்–குடியிருப்பு | 1791.21 | 1700.00 | 1500.00 | 1550.00 |
| 110 | 01 | 02 | சொத்து வரி– பொது காரியங்கள்–வணிகம் | 1025.46 | 1000.00 | 1100.00 | 1150.00 |
| 110 | 01 | 03 | சொத்து வரி– பொது காரியங்கள் | 499.65 | 500.00 | 50.00 | 100.00 |
| 110 | 01 | 04 | சொத்து வரி – பொது காரியங்கள் – காலியிடம் | 190.33 | 100.00 | 210.00 | 215.00 |
| 110 | 10 | 01 | தொழில் வரி | 1080.54 | 1500.00 | 1600.00 | 1650.00 |
| 110 | 11 | 01 | விளம்பர வரி | 0.00 | 0.00 | 30.00 | 35.00 |
| | | | **மொத்தம்** | **4036.19** | **4700.00** | **3910.00** | **4325.00** |
| 120 | 2. பிற நிறுவனங்களில் வசூலாகும் வருவாய் | | | | | | |
| 120 | 10 | 01 | முத்திரைதாள் தீர்வை | 1065.45 | 1200.00 | 1300.00 | 1500.00 |
| 120 | 10 | 02 | கேளிக்கை வரி | 1115.75 | 550.00 | 550.00 | 1300.00 |
| 120 | 10 | 03 | சுரங்கம் | 0.00 | 100.00 | 100.00 | 100.00 |
| | | | **மொத்தம்** | **1115.75** | **1850.00** | **1950.00** | **2900.00** |
| 130 | 3. மாநகராட்சி சொத்துக்களிலிருந்து வரும் வாடகை வருமானம் | | | | | | |
| 130 | 10 | 03 | தினசரி சந்தைக் கட்டணம் | 248.45 | 410.00 | 300.00 | 350.00 |
| 130 | 10 | 01 | வணிக வளாகங்களின் வாடகை | 34.52 | 75.00 | 65.00 | 500.00 |
| 130 | 10 | 02 | சமுதாய மன்ற வாடகை | 5.47 | 10.00 | 10.00 | 10.00 |
| 130 | 10 | 06 | பேருந்து நிலையக் கட்டணம் | 111.52 | 200.00 | 115.00 | 300.00 |
| 130 | 10 | 07 | வண்டிப் பேட்டைக் கட்டணம் | 57.83 | 75.00 | 13.00 | 15.00 |
| 130 | 10 | 08 | மரங்களிலிருந்து வருவாய் | 0.06 | 1.50 | 1.50 | 1.50 |
| 130 | 20 | 01 | கட்டிட வாடகை | 477.76 | 640.00 | 640.00 | 700.00 |
| 130 | 30 | 01 | பயணிகள் தங்கும் விடுதி வாடகை | 2.52 | 20.00 | 20.00 | 20.00 |
| 130 | 40 | 01 | நில வாடகை (அ) குத்தகை | 136.82 | 320.00 | 150.00 | 250.00 |
| 130 | 80 | 01 | பெட்டிக் கடை வாடகை | 23.08 | 125.00 | 35.00 | 40.00 |
| 130 | 80 | 03 | வாகனங்கள் நிறுத்துமிடம் கட்டணம் | 46.06 | 750.00 | 115.00 | 300.00 |

| தலைப்பு எண் | | | இனம் | 2019–2020 (கணக்கின் படி) | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|---|---|---|
| 130 | 80 | 05 | கட்டணக் கழிவறைக் கட்டணம் | 236.65 | 320.00 | 250.00 | 350.00 |
| 130 | 80 | 07 | கேபிள் வடம் வாடகை | 39.55 | 45.00 | 45.00 | 150.00 |
| | | | **மொத்தம்** | **1420.29** | **2991.50** | **1759.50** | **2986.50** |
| **140** | **4.** சேவை கட்டணம் மற்றும் கட்டணங்கள் | | | | | | |
| 140 | 11 | 01 | தொழில் உரிமக் கட்டணம் | 189.51 | 150.00 | 100.00 | 200.00 |
| 140 | 11 | 03 | கட்டிட உரிமக் கட்டணம் | 553.08 | 1500.00 | 1000.00 | 1500.00 |
| 140 | 11 | 04 | ஆடுவதை செய்யும் இடக் கட்டணம் | 5.11 | 25.00 | 42.00 | 50.00 |
| 140 | 12 | 02 | பொது கேளிக்கை உரிமக் கட்டணம் | 0.19 | 5.00 | 5.00 | 5.00 |
| 140 | 13 | 01 | நகல்களுக்குரிய விண்ணப்பக் கட்டணம் | 8.76 | 5.00 | 2.00 | 5.00 |
| 140 | 13 | 02 | பிறப்பு இறப்பு சான்றிதழ் கட்டணம் | 44.49 | 60.00 | 50.00 | 50.00 |
| 140 | 14 | 01 | மேம்பாடு அபிவிருத்தி கட்டணம் | 26.65 | 100.00 | 30.00 | 50.00 |
| 140 | 14 | 02 | மனை வரன்முறைப்படுத்துதல் கட்டணம் | 2.60 | 60.00 | 28.00 | 40.00 |
| 140 | 14 | 03 | பிற மேம்பாடு அபிவிருத்தி கட்டணம் | 262.82 | 350.00 | 300.00 | 350.00 |
| 140 | 14 | 05 | அனுமதியற்ற மனைப்பிரிவு மேம்பாடு அபிவிருத்தி கட்டணம் | 1159.25 | 3500.00 | 1200.00 | 1500.00 |
| 140 | 15 | 01 | ஆக்கிரமிப்புக் கட்டணம் | 0.00 | 2.00 | 2.00 | 2.00 |
| 140 | 15 | 02 | அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களை இடிப்பதற்கான கட்டணங்கள் | 8.90 | 60.00 | 10.00 | 15.00 |
| 140 | 20 | 01 | மறுக்கப்பட்ட காசோலைக்குரிய தண்டத் தொகை | 0.09 | 1.00 | 1.00 | 1.00 |
| 140 | 20 | 02 | நீதி மன்ற அபராதக் கட்டணம் | 0.00 | 10.00 | 10.00 | 10.00 |
| 140 | 40 | 01 | விளம்பரக் கட்டணங்கள் | 0.77 | 0.00 | 0.00 | 0.00 |
| 140 | 40 | 02 | நில அளவுக் கட்டணம் | 433.80 | 0.00 | 150.00 | 300.00 |
| 140 | 40 | 03 | திருவிழாக்கள்(ம) கொண்டாட்டம் வருவாய் | 16.98 | 37.00 | 3.00 | 5.00 |
| 140 | 40 | 04 | இதரக் கட்டணங்கள் | 17.33 | 36.00 | 45.00 | 50.00 |
| 140 | 50 | 01 | மருத்துவ மனைகளில் இருந்தும் (ம) மருந்தகங்களில் இருந்தும் வரவுகள் | 0.00 | 1.00 | 1.00 | 1.00 |
| 140 | 50 | 06 | கழிவறை கழிவு நீர்த் தொட்டி சுத்தம் செய்யும் கட்டணம் | 0.57 | 1.00 | 1.50 | 2.00 |
| 140 | 50 | 07 | இடுகாட்டுக் கட்டணம் | 32.09 | 15.00 | 40.00 | 50.00 |
| 140 | 50 | 10 | திடக்கழிவு மேலாண்மை – உபயோகிப்பாளர்கள் கட்டணம் | 432.44 | 0.00 | 450.00 | 600.00 |

| தலைப்பு எண் | | | இனம் | 2019–2020 (கணக்கின் படி) | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|---|---|---|
| 140 | 60 | 01 | தோட்டங்கள் (ம) பூங்காக்கள் வரவுகள் | 2.07 | 4.00 | 1.00 | 2.00 |
| 140 | 70 | 01 | சாலையில் வெட்டப்பட்ட குழியை சீரமைப்பு செய்யக் கட்டணம் | 0.00 | 5.00 | 5.00 | 5.00 |
| 140 | 70 | 17 | சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணம் | 13.65 | 15.00 | 26.00 | 30.00 |
| 140 | 70 | 18 | கட்டிட உரிம விண்ணப்ப கட்டணம் | 0.05 | 1.00 | 2.00 | 3.00 |
| 140 | 80 | 03 | சில்லறை பிடித்தங்கள் | 8.65 | 50.00 | 9.00 | 10.00 |
| 140 | 80 | 04 | திறவிடத்திற்கான கட்டணம் | 0.00 | 350.00 | 350.00 | 350.00 |
| | | | மொத்தம் | **3242.57** | **6433.00** | **3890.50** | **5226.00** |
| **150** | 5. விற்பனை மற்றும் வாடகை கட்டணங்கள் | | | | | | |
| 150 | 10 | 02 | குப்பை உர விற்பனை | 0.16 | 50.00 | 1.00 | 2.00 |
| 150 | 10 | 01 | குப்பைகள், கட்டடக் கழிவுகள் (ம) கழிவு நீர் பண்ணையின் அடி மண் விற்பனை | 0.00 | 10.00 | 0.00 | 10.00 |
| 150 | 10 | 03 | அம்மா உணவகம் | 86.93 | 150.00 | 70.00 | 150.00 |
| 150 | 12 | 02 | தேவையற்ற பொருட்கள் விற்பனை | 0.48 | 50.00 | 1.00 | 5.00 |
| | | | மொத்தம் | **92.27** | **265.00** | **77.00** | **172.00** |
| **160** | 6. மான்யம் மற்றும் பங்குத் தொகைகள் | | | | | | |
| 160 | 10 | 04 | பகிர்மான நிதி | 9349.08 | 9200.00 | 10000.00 | 11500.00 |
| 160 | 10 | 04 | ஒரு முறை மான்யம் | 0.00 | 0.00 | 2500.00 | 0.00 |
| 160 | 10 | 04 | ORS மற்றும் IPPV மான்யம் | 0.00 | 0.00 | 1000.00 | 200.00 |
| 160 | 10 | 05 | இதர மான்யம் | 0.00 | 0.00 | 300.00 | 0.00 |
| 160 | 10 | 01 | 14வது நிதிக்குழு மான்யம் | 0.00 | 0.00 | 2400.00 | 0.00 |
| | | | மொத்தம் | **9349.08** | **9200.00** | **16200.00** | **11700.00** |
| **170** | 7. முதலீடுகள் மீதான வட்டி | | | | | | |
| 170 | 10 | 01 | முதலீடுகள், நிரந்தர வைப்புத் தொகை மீது வட்டி | 665.78 | 700.00 | 300.00 | 600.00 |
| | | | மொத்தம் | **665.78** | **700.00** | **300.00** | **600.00** |
| **171** | 8. வங்கி கணக்குகள் மீதான வட்டி | | | | | | |
| 171 | 10 | 01 | வங்கி கணக்குகள் மீதான இருப்புக்குரிய வட்டி | 248.02 | 200.00 | 400.00 | 500.00 |
| | | | மொத்தம் | **248.02** | **200.00** | **400.00** | **500.00** |
| **180** | 9. பிற வருமானங்கள் | | | | | | |
| 180 | 80 | 01 | இதர வருவாய் | 177.00 | 350.00 | 200.00 | 350.00 |
| 180 | 80 | 03 | இதர வருவாய் (குறிப்பிட்ட இனத்திற்கு) | 20.90 | 65.00 | 10.00 | 10.00 |
| | | | மொத்தம் | **197.90** | **415.00** | **210.00** | **360.00** |
| **280** | 10. முந்தைய ஆண்டு வரவினம் | | | | | | |
| 280 | 40 | 01 | முந்தைய ஆண்டு வரவினம் | 157.15 | 200.00 | 200.00 | 200.00 |
| | | | மொத்தம் | **157.15** | **200.00** | **200.00** | **200.00** |
| | | | **கூடுதல் ( 1 முதல் 10 வரை)** | **20525.00** | **26954.50** | **28897.00** | **28969.50** |

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
## 2020–2021ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு மற்றும்
## 2021–2022ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு
## வருவாய் நிதி – செலவினங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| தலைப்பு எண் | | | இனம் | 2019–2020 (கணக்கின் படி) | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|---|---|---|
| 210 | 1. ஊதியம் | | | | | | |
| 210 | 10 | 01 | ஊதியம் | 7067.48 | 8200.00 | 7500.00 | 8000.00 |
| 210 | 10 | 04 | அகவிலைப்படி | 1555.99 | 1250.00 | 1575.00 | 1650.00 |
| 210 | 10 | 05 | வீட்டு வாடகைப்படி | 459.10 | 400.00 | 400.00 | 500.00 |
| 210 | 10 | 06 | நகர ஈட்டுப்படி | 74.92 | 90.00 | 90.00 | 100.00 |
| 210 | 10 | 07 | மருத்துவப்படி | 116.33 | 120.00 | 120.00 | 125.00 |
| 210 | 10 | 08 | இதரப் படிகள் | 34.65 | 65.00 | 50.00 | 60.00 |
| 210 | 10 | 09 | தினக் கூலி (என்.எம்.ஆர்) | 259.14 | 100.00 | 100.00 | 100.00 |
| 210 | 10 | 10 | கூலி – இதர இனம் | 2298.40 | 2500.00 | 2500.00 | 2600.00 |
| 210 | 10 | 11 | மிகை ஊதியம்(போனஸ்) | 62.24 | 50.00 | 50.00 | 50.00 |
| 210 | 10 | 15 | நிலஅளவு செலவுகள் | 0.00 | 30.00 | 30.00 | 30.00 |
| 210 | 20 | 01 | மருத்துவச் செலவு (ம) கட்டணம் மீளப் பெறுதல் | 0.03 | 0.00 | 0.10 | 0.10 |
| 210 | 20 | 03 | கூடுதல் நேரப்படி | 0.34 | 1.00 | 1.00 | 1.00 |
| 210 | 20 | 04 | சீருடை வழங்கல் | 18.50 | 30.00 | 30.00 | 30.00 |
| 210 | 20 | 05 | பயிற்சிக்கான செலவுகள் | 4.71 | 10.00 | 10.00 | 10.00 |
| 210 | 20 | 10 | மருத்துவ காப்பீடு உள்ளாட்சிகள் பங்களிப்பு | 11.01 | 10.00 | 10.00 | 10.00 |
| 210 | 20 | 13 | சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் கொடை வழங்கல் (கிராஜ்விட்டி) திட்டம் | 5.50 | 10.00 | 10.00 | 10.00 |
| 210 | 20 | 14 | குழுக்காப்பீட்டு திட்டம்–நிர்வாக பங்குத் தொகை | 12.58 | 70.00 | 50.00 | 60.00 |
| 210 | 20 | 15 | பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் – நிர்வாக பங்குத் தொகை | 83.91 | 400.00 | 175.00 | 200.00 |
| 210 | 20 | 19 | ஊர்திப் படி | 14.85 | 0.00 | 10.00 | 12.00 |
| 210 | 20 | 20 | சலவைப் படி | 0.03 | 0.00 | 0.10 | 0.10 |
| 210 | 20 | 21 | கௌரவ ஊதியம் | 22.08 | 0.00 | 20.00 | 20.00 |
| 210 | 30 | 01 | ஓய்வூதியம் | 2853.23 | 1900.00 | 2500.00 | 3000.00 |
| 210 | 30 | 02 | குடும்ப ஓய்வூதியம் | 77.60 | 1150.00 | 200.00 | 250.00 |
| 210 | 30 | 04 | தொகுப்பு ஓய்வூதியம் | 514.56 | 760.00 | 500.00 | 600.00 |
| 210 | 30 | 06 | ஓய்வூதியம் (ம) விடுப்பூதியம் பங்குத் தொகை – அயற்பணி பணியாளர்கள் | 0.00 | 5.00 | 5.00 | 5.00 |
| 210 | 40 | 01 | ஓய்வூதியதாரர்கள் விடுப்பு ஊதியமாக்கம் | 0.00 | 100.00 | 100.00 | 100.00 |
| 210 | 40 | 02 | பணிக்கொடை | 523.20 | 720.00 | 500.00 | 600.00 |
| 210 | 40 | 04 | ஓய்வூதியர் மருத்துவ உதவி | 28.70 | 0.00 | 10.00 | 15.00 |

| தலைப்பு எண் | | | இனம் | 2019–2020 (கணக்கின் படி) | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|---|---|---|
| 210 | 40 | 06 | மாநகராட்சி ஊழியர்களுக்கான ஓய்வு கால பிற பங்களிப்பு | 110.80 | 50.00 | 15.00 | 20.00 |
| | | | **மொத்தம்** | **16209.88** | **18021.00** | **16561.20** | **18158.20** |
| **220** | **2. நிர்வாக செலவினங்கள்** | | | | | | |
| 220 | 10 | 04 | வாகன வரி | 3.59 | 3.00 | 5.00 | 5.00 |
| 220 | 10 | 01 | கட்டிடங்களுக்கான வாடகை | 0.64 | 1.00 | 1.00 | 1.00 |
| 220 | 11 | 01 | அலுவலக கட்டிடங்களுக்கு மின் கட்டணம் | 705.56 | 20.00 | 20.00 | 20.00 |
| 220 | 11 | 05 | கணினி இயக்க செலவினங்கள் | 70.89 | 65.00 | 70.00 | 75.00 |
| 220 | 12 | 01 | தொலைபேசிக் கட்டணங்கள் | 45.75 | 60.00 | 40.00 | 50.00 |
| 220 | 12 | 03 | தபால் தந்தி (ம) பேக்ஸ் கட்டணங்கள் | 19.17 | 6.00 | 5.00 | 5.00 |
| 220 | 20 | 01 | புத்தகங்கள் தினசரி (ம) வார இதழ்கள் | 13.84 | 6.00 | 6.00 | 6.00 |
| 220 | 21 | 01 | எழுது பொருள் (ம) அச்சடிக்கப்பட்ட படிவங்கள் (ம) புத்தகங்கள் | 78.87 | 80.00 | 55.00 | 60.00 |
| 220 | 30 | 01 | பயணச் செலவுகள் | 8.95 | 10.00 | 5.00 | 10.00 |
| 220 | 40 | 01 | வாகனகாப்பீட்டுக் கட்டணங்கள் | 44.50 | 30.00 | 50.00 | 60.00 |
| 220 | 50 | 01 | தணிக்கை கட்டணம் | 0.00 | 65.00 | 65.00 | 65.00 |
| 220 | 51 | 01 | வழக்கறிஞர் கட்டணம் | 0.62 | 0.50 | 1.50 | 2.00 |
| 220 | 51 | 02 | நீதி மன்ற செலவினங்கள் | 8.81 | 8.00 | 5.00 | 5.00 |
| 220 | 51 | 04 | வழக்கு மற்றும் சமரச தீர்ப்பாய செலவினங்கள் | 17.39 | 10.00 | 10.00 | 10.00 |
| 220 | 52 | 02 | பொறியியல் கலந்தறிதற்குரியர் கட்டணம் | 247.83 | 300.00 | 300.00 | 350.00 |
| 220 | 52 | 03 | பிற தொழில் முறை சேவை கட்டணம் | 24.25 | 5.00 | 5.00 | 5.00 |
| 220 | 60 | 01 | விளம்பரச் செலவினம் | 123.31 | 100.00 | 100.00 | 100.00 |
| 220 | 60 | 02 | வரவேற்பு (ம) விருந்தோம்பல் | 1.17 | 1.00 | 1.00 | 1.00 |
| 220 | 80 | 01 | ரொக்கப் பரிசு மற்றும் பரிசுகள் | 0.54 | 2.50 | 2.50 | 2.50 |
| 220 | 80 | 03 | இதர செலவினங்கள் | 41.75 | 100.00 | 600.00 | 250.00 |
| 220 | 80 | 04 | மன்ற உறுப்பினர்கள் கௌரவ ஊதியம் | 0.00 | 10.00 | 0.00 | 10.00 |
| | | | **மொத்தம்** | **1457.43** | **883.00** | **1347.00** | **1092.50** |
| **230** | **3. பழுது மற்றும் பராமரிப்பு செலவினங்கள்** | | | | | | |
| 230 | 10 | 03 | மின் கட்டணம் – தெரு விளக்குகள் | 1048.07 | 1000.00 | 1000.00 | 1000.00 |
| 230 | 30 | 02 | டீசல் | 727.58 | 500.00 | 500.00 | 500.00 |
| 230 | 30 | 04 | மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்துகளுக்கான செலவினங்கள் | 14.18 | 25.00 | 25.00 | 25.00 |
| 230 | 30 | 05 | துப்புரவுப் பொருட்களுக்கான செலவினங்கள் | 18.52 | 40.00 | 40.00 | 50.00 |
| 230 | 40 | 01 | தனியார் லாரி/டேங்கர்கள் மூலம் குடிநீர் வழங்குவதற்கான வாகன வாடகைக் கட்டணம் | 457.28 | 0.00 | 0.00 | 0.00 |
| 230 | 40 | 02 | இயந்திரங்கள்/உபகரணங்களுக்கான வாடகைக் கட்டணம் | 12.60 | 0.00 | 0.00 | 20.00 |

| தலைப்பு எண் | | | இனம் | 2019–2020 (கணக்கின் படி) | 2020–2021 (திட்ட மதிப்பீடு) | 2020–2021 (திருத்திய மதிப்பீடு) | 2021–2022 (திட்ட மதிப்பீடு) |
|---|---|---|---|---|---|---|---|
| 230 | 40 | 03 | வாகனங்களுக்கான வாடகைக் கட்டணம் | 38.47 | 0.00 | 150.00 | 100.00 |
| 230 | 50 | 01 | மராமத்து (ம) பராமரிப்பு சாலைகள் (ம) நடைபாதைகள் – சிமிண்ட் கான்கிரீட் | 252.99 | 50.00 | 75.00 | 75.00 |
| 230 | 50 | 02 | மராமத்து (ம) பராமரிப்பு – சாலைகள் (ம) நடை பாதைகள் – தார்தளம் | 78.03 | 50.00 | 75.00 | 75.00 |
| 230 | 50 | 05 | மராமத்து (ம) பராமரிப்பு – மழை நீர் வடிகால்கள் – திறந்த வெளிச் சாக்கடைகள் (ம) சிறு பாலங்கள் | 278.67 | 100.00 | 75.00 | 80.00 |
| 230 | 50 | 06 | இரயில்வே கடக்கும் பாதைகள் (ம) மேம்பாலங்கள் பராமரிப்பு செலவினங்கள் | 0.00 | 5.00 | 10.00 | 10.00 |
| 230 | 50 | 07 | தெரு விளக்கு பராமரிப்பு செலவினங்கள் | 147.35 | 200.00 | 100.00 | 150.00 |
| 230 | 50 | 08 | உரக்கிடங்கில் மேம்பாட்டு பணிகள் | 0.00 | 50.00 | 10.00 | 10.00 |
| 230 | 50 | 09 | குடிநீர் வழங்கு பணிகள் பராமரிப்பு செலவினங்கள் | 3.11 | 5.00 | 10.00 | 10.00 |
| 230 | 50 | 10 | கழிவு நீர் அகற்றல் பணிகள் பராமரிப்பு செலவினங்கள் | 57.83 | 5.00 | 5.00 | 5.00 |
| 230 | 50 | 13 | சாலைகளில் வெட்டப்பட்ட குழிகளை சீரமைத்தல் | 22.80 | 25.00 | 25.00 | 25.00 |
